DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.125/2025

DW - 1

| | | |
|---|---|---|
| Name | : | சேகர் |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

எதிரி தரப்பில் **BNSS** பிரிவு **353-**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்தன் பேரில் எதிரி எதிரி தரப்பில் சாட்சியாக விசாரணை செய்யப்படுகிறார்**.**

முதல் விசாரணை **Date : 14.07.2026**

நானும் வாதி சுகண்யாவும் பள்ளியில் இருந்து ஒன்றாக படித்து வந்தோம். சுகண்யா எனது பக்கத்து ஊரை சார்ந்தவர். நானும் சுகண்யாவும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள். சுகண்யா நான் திருமணம் செய்துகொள்ளும் முறையில் உள்ள பெண் ஆவார். நான் எனது பட்ட படிப்பை முடித்ததற்கு பின்னர் நான் கோயமுத்துாரில் வேலை செய்து கொண்டிருந்தபோது சுகண்யாவும் கோயமுத்துாரில் வேலை செய்துகொண்டிருந்ததாக கேள்விபட்டேன். பின்னிட்டு கடந்த 2018ம் வருடம் முதல் பேஸ்புக்கில் நண்பர்களாக மீண்டும் பேச தொடங்கினோம். பின்பு நானும் சுகண்யாவும் காதலித்து வந்தோம். நானும் சுகண்யாவும் திருமணம் செய்துகொள்ளலாம் என முடிவு செய்தோம்.

சுகண்யா என்னை அவரது பெற்றோரிடம் வந்து பேசுமாறு சொன்னார். மேலும் நான் பொருளாதாரத்தில் பின்தங்கி இருப்பது மட்டுமே பிரச்சனையாக இருக்காது எனவும் நான் நல்லகுணம் கொண்டிருந்தால் எனது அப்பா சம்மதிப்பார் என கூறினார்.

இவ்வாறு பழகிவந்த நிலையில் திடீர் என சுகண்யா என்னிடம் பேசுவதை நிறுத்திவிட்டார். நானும் எனது வேலையில் கவனம் செலுத்தி வந்தேன். சில காலம் கழித்து திரும்பவும் சுகண்யா பேசுவார். திடிர் என மீண்டும் பேசுவதை நிறுத்திவிட்டார் இவ்வாறு சில காலம் சென்றது. இவ்வாறு சில காலம் பேசுவதும் திருமண பேச்சு வந்ததும் பேசுவதை நிறுத்துவதுமாக சென்றது.

பின்பு எனக்கு ஹதராபாத்தில் வேலை கிடைத்து 2022ம் வருடம் அங்கு வேலைக்கு சென்றிருந்தேன். இந்நிலையில் சில சமயங்களில் நான் சுகண்யா வேலை செய்து வந்த அன்னூர் மற்றும் இராசிபுரம் வங்கி கிளைகளுக்கு சென்று அவரிடம் பேசுவேன். அவரும் என்னுடன் சாதாரனமாக பேசி வந்தார்.

பின்பு நான் ஹதரபாத் சென்றுவிட்டதால் வாதி சுகண்யா எனக்கு போனில் Message செய்து பிறகு நாங்கள் போனில் பேசி வந்தோம். இந்நிலையில் திடீர்என சுகண்யா என்னிடம் பேசுவதை மீண்டும் நிறுத்திவிட்டார். பிறகு நான் ஹதராபாத்தில் இருந்து கோயமுத்தூருக்கு வேலைதேடி வந்தேன். நான் கோயமுத்தூரில் வேலைக்கு சேர்ந்ததற்கு பின்னிட்டு 2022ம் ஆண்டு செப்டம்பர் மாதம் சுகண்யா எனக்கு போன் செய்து தான் தனது வீட்டில் பேசிக்கொள்வதாகவும் திருமணம் செய்துகொள்ளலாம் என்றும் சொன்னார். அதன் பின்பு நானும் சுகண்யாவும் நன்கு பேசி வந்தோம். நானும் சுகண்யாவும் இரவு முழுவதும் போனில் பேசியும் Message செய்தும் வந்தோம். நான் சுகண்யாவுக்கு பரிசுகள் வழங்கி வந்தேன். அவரும் வாங்கிகொள்வார்.

இவ்வாறு சென்றுகொண்டிருந்ததால் நான் சாதாரணமாக அவரது வங்கிக்கு சென்று பேசுவேன். அவ்வாறு நான் சேந்தமங்கலம் வங்கி கிளைக்கு சென்று சுகண்யாவிடம் பேசுவேன். அவரும் சாதாரணமாகத்தான் பேசி வந்தார். திடீர் என ஒரு நாள் என் மீது சுகண்யா காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாக கேள்விபட்டேன். நான் எனது பெற்றோர் மூலம் சுகண்யாவின் பெற்றோரிடம் விசாரித்தபோது அவர்கள் சொந்தகாரர்களின் அழுத்தத்தால் புகார் கொடுத்ததாகவும் புகாரை வாபஸ் வாங்கி கொள்வதாகவும் தெரிவித்தார்கள். அதனால் நான் பிரச்சனை வேண்டாம் என எனது வேலைக்கு சென்றுவிட்டேன்.

பின்பு 6 மாதங்கள் கழித்து புகாரை சுகண்யா வாபஸ் வாங்கி இருப்பார் என நினைத்து நான் அவரது சேந்தமங்கலம் கிளை வங்கிக்கு சென்று அவரிடம் பேசிக்கொண்டிருந்தேன். அவரும் சாதாரணமாகத்தான் பேசிக்கொண்டிருந்தார். பிறகு சில நாட்கள் கழித்து சுகண்யா மீண்டும் என் மீது காவல் நிலையத்தில் புகார்

கொடுத்ததாக கேள்விபட்டேன். சுகண்யா இரண்டாவது முறை என் மீது புகார் கொடுத்திருந்ததால் நான் அவரை எவ்வகையிலும் தொடர்புகொண்டு பேச முயற்சிக்கவில்லை. பிறகு சில நாட்கள் கழித்து சுகண்யாவிற்கு என்னைவிட வசதியான மாப்பிள்ளை பார்த்து திருமணம் செய்து வைத்துவிடடார்கள் என தெரிந்துகொண்டேன். நான் சுகண்யாவை எந்த காலத்திலும் தொந்தரவு செய்யவில்லை. என்னை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்யுமாறு வேண்டுகிறேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் சுகண்யாவின் வங்கிக்கு சென்று அவரை என்னை திருமணம் செய்துகொள்ளுமாறு தொடர்ந்து தொந்தரவு செய்து வந்தேன் என்றும், அவர் என்னுடன் பேச விருப்பம் இல்லை என தெரிவித்ததற்கு பின்னிட்டும் தொடர்ச்சியாக மன உளைச்சலை ஏற்படுத்தும் வகையில் நடந்துகொண்டேன் எனவும் கடந்த 04.10.2024ம் தேதி நான் சுகண்யா வேலை பார்க்கும் வங்கிக்கு சென்று அவரது கேபினுக்குள் அத்துமீறி உள்ளே நுழைந்து அவரை தொந்தரவு செய்து அவருக்கு பாதுகாப்பு இன்மையை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் அனைத்தும் பொய் என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**